**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், அரூர்**

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

தலைமை அதிகாரி - மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம் / சார்பு நீதிபதி, அரூர்

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 02 ஆம் செவ்வாய்கிழமை

**மோ.கோ.அ.ம.எண்.56/2021**

CNR.No.TNDP10-000725-2021

1. வாசு (இறப்பு), த/பெ. அருணாசலம், வயது சுமார் 53/2021, இந்து, வழக்கறிஞர் உதவியாளர் பணி, வசிக்குமிடம் அரூர் திரு.வி.க நகர், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டத்தில் குடியிருந்து தற்பொழுது சக்கிலிப்பட்டி கிராமம், கொங்கவேம்பு அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்.

2. நெல்சன்மண்டேலா, த/பெ. லேட்.வாசு, வயது சுமார் 35/2021, வசிக்குமிடம் க.எண்.231, அரூர் திரு.வி.க.நகர், அரூர் அஞ்சல் மற்றும் வட்டம், தருமபுரி மாவட்டம்.

3. கிளாரா, த/பெ. லேட்.வாசு, வயது சுமார் 34, வசிக்குமிடம் க.எண்.231/10, அரூர் திரு.வி.க.நகர், அரூர் அஞ்சல் மற்றும் வட்டம், தருமபுரி மாவட்டம்.

(Amended as per order I.A.02/2024 ,dt:24.10.2024 ன்படி 1ம் மனுதாரர் இறப்பு என்றும், 2,3 மனுதாரர்கள் தரப்பினர்களாகவும் சேர்க்கப்பட்டுள்ளனர்)

.... மனுதாரர்கள்

**// எதிராக//**

1. ராமமூர்த்தி, த/பெ. அப்பாய்நாயுடு, வசிக்குமிடம் க.எண்.109-A/33-A, வெள்ளாளர் தெரு, அய்னாவரம், சென்னை 600-023.

2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, நெ-22, P.R.சுந்தரம் ஐயர் தெரு, தருமபுரி. ... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 22.04.2026 ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.இராதாகிருஷ்ணன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.06.02 17:06:36 +0530

திரு.ஆர்.செந்தில்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், இரு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலினை செய்தும், இதுநாள் வரை என் பரிசீலினையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. கடந்த 06.08.2021ம் தேதியில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த மனுதாரர் இழப்பீடாக ரூ.20,00,000/-ம் கோரி இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 166 மற்றும் உடன் இணைந்த விதி 3 தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாய விதிகளின் கீழ் தாக்கல் செய்துள்ளார். பின்வரும் விவரங்களுடன்:

| | | |
|---|---|---|
| 1. | காயமுற்றவரது பெயர் --- | வாசு த/பெ. அருணாசலம் |
| 2. | விபத்தின் போது காயமுற்றவரது வயது/பாலினம் --- | 53 / ஆண் |
| 3. | காயமுற்றவரது வேலை --- | விவசாயம் மற்றும் வழக்கறிஞர் உதவியாளர். |
| 4. | காயமுற்றவரது மாத வருமானம் --- | ரூ.25,000/- |
| 5. | கோரியுள்ள இழப்பீட்டு தொகை --- | ரூ.20,00,000/- |
| 6. | உரிமை கோருபவரின் வங்கி கணக்கு விவரம் --- | 1. நெல்சன் மண்டேலா,<br>சேமிப்பு வங்கி கணக்கு<br>A/C.No.50100247425639.<br>பராமரிக்கப்படுவது,<br>எச்.டி.எப்.சி பாங்க், அரூர்.<br>2. கிளாரா,<br>சேமிப்பு வங்கி கணக்கு<br>A/C.No.102901000019331.<br>பராமரிக்கப்படுவது,<br>இந்தியன் ஓவர்சியஸ் வங்கி,<br>அனுமந்தீர்த்தம். |
| 7. | நீதிமன்ற கட்டணம் --- | தற்போது நீதிமன்ற கட்டணம் |



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:38 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ.372.50/- செலுத்தப்பட்டது. (மீதி நீதிமன்ற கட்டணத்திற்கு தனியாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.) |
| 8. | மனு தாக்கல் தேதி | --- | 25.10.2021. |

2. **<u>மனுவின் சுருக்கம்</u>** : -

(i) இறந்த 1-ம் மனுதாரர் கடந்த 06.08.2021-ம் தேதி அவரது ஊரிலிருந்து கொமாரம்பட்டி என்ற ஊருக்கு தனது சொந்த வேலையாக சென்றுவிட்டு வேலையை முடித்துக்கொண்டு மீண்டும் மதியம் 12.30 மணிக்கு கொமாரம்பட்டியில் இருந்து மாம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு பஸ் ஏறுவதற்காக ரோட்டின் இடதுபுறமாக மண்ரோட்டில் நடந்து வந்துக்கொண்டிருந்தபோது காளியம்மன் கோயில் எதிரில் இறந்த 1-ம் மனுதாரருக்கு பின்னால் ஊத்தங்கரையிலிருந்து அரூர் நோக்கி வந்துக் கொண்டிருந்த TN-01-AJ-6945 என்ற லாரியை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இறந்த 1ம் மனுதாரர் மீது மோதியதில் இறந்த 1-ம் மனுதாரருக்கு வலதுபுறம் முழங்கையில் ரத்தகாயமும், வலதுபுறம் இடுப்பில் எலும்பு முறிவும், வலதுபுறம் மற்றும் இடதுபுறம் பரியில் எலும்பு முறிவும் மற்றும் உடல் எங்கும் சிராய்பு காயங்களும், ரத்தகாயங்களும் ஏற்பட்டுள்ளது. அடிப்பட்ட 1-ம் மனுதாரரை அருகில் இருந்தவர்கள் 108 க்கு போன் செய்து ஆம்புலன்ஜில் ஏற்றி வந்து அரூர் GH-ல் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார்கள். அங்கு இறந்த 1-ம் மனுதாரர் முதலுதவி செய்துக்கொண்டு பின்னர் தருமபுரி தலைமை மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்று அங்கிருந்து சேலம் நியூரோ பவுண்டேஷன் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்று இறந்த 1-ம் மனுதாரருக்கு இடுப்பில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு போல்டு பொறுத்தப்பட்டு மருத்துவமனையிலேயே 10 நாட்களுக்கு மேல் உள்நோயாளியாக இருந்து இறந்த 1ம் மனுதாரருக்கு இடுப்பில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு போல்ட் பொருத்தப்பட்டு மருத்துவமனையிலேயே 10



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:41 +0530

நாட்களுக்கு மேல் உள்நோயாளியாக இருந்து இறந்த 1-ம் மனுதாரர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

(ii) இறந்த 1-ம் மனுதாரர் விபத்திற்கு முன் நல்ல திடகாத்திரமாகவும், நல்ல உடல்நிலையுடனும் இருந்து விவசாயம் மற்றும் வழக்கறிஞரின் உதவியாளராக பணிபுரிந்து மாதம் ரூ.25,000/-ம் வரை சம்பாதித்து தனது குடும்பத்தை பராமரித்து வந்தார். இறந்த 1-ம் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தினால் முன்புபோல் வேலை செய்ய முடியாமல். வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இறந்த 1-ம் மனுதாரருக்கு இடுப்பு பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவால் உட்காயத்தால் இறந்த 1-ம் அதிக நேரம் நிற்கமுடியாமலும், உட்கார முடியாமலும், நடக்கமுடியாமலும், எந்த வேலையும் செய்யமுடியாமலும், பெருத்த சிரமம் ஏற்பட்டு படுத்தபடுக்கையாக இருந்து வருகிறார். ரூ.5,00,000/க்கு மேல் மருத்துவ செலவுகள் செய்தும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் முழவதும் குணம் அடையாமல் இருந்து வருகிறார். இறந்த 1-ம் மனுதாரர் வேலை செய்ய முடியாமல் தன் குடும்பத்தை பராமரிக்க முடியாமல் சிரமப்பட்டு வாழ்ந்து வருகிறார். இறந்த 1ம் மனுதாரரின் குடும்பம் மனுதாரரை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். மேற்படி விபத்தினால் இறந்த 1-ம் மனுதாரரின் குடும்பத்தின் எதிர்கால வாழ்க்கையே மேற்படி விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) மேற்படி விபத்திற்கு காரணமான TN-01-AJ-6945 என்ற லாரி ஓட்டுநரின் அதிவேகமும், அஜாகரதையும், கவனக்குறைவுமே விபத்திற்கு முழு காரணம் என்பதால் TN-01-AJ-6945 என்ற வண்டியின் ஒட்டுநர் மீது அரூர் காவல் நிலையத்தார் குற்ற எண்.522/2021 பிரிவு 279, 337 I.P.C. படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN-01-AJ-6945 என்ற வண்டியின் ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என்பதால் TN-01-AJ-6945 என்ற வண்டியின் உரிமையாளரான 1-ம் எதிர்மனுதாரரும், மேற்படி வண்டியின் பாலிசிதாரரான 2-ம் எதிர்மனுதாரரும் இறந்த 1-ம் மனுதாரருக்கு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:43 +0530

நஷ்டஈடு வழங்க சட்டப்படி கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(iv) 1-ம் மனுதாரர் அசல் நஷ்டஈட்டு மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்த நிலையில் அவர் கடந்த 05.07.2023-ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசு ஆவார்கள். 1-ம் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது போது 2,3 மனுதாரர்கள் தான் மருத்துவ செலவுகள் செய்ததால் எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு நஷ்டஈடும், மருத்துவபில்லில் கண்ட தொகைகளையும் வழங்க சட்டப்படி கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(v) இறந்த 1-ம் மனுதாரருக்கு ஏற்பட்ட இந்த விபத்து குறித்து இறந்த 1-ம் மனுதாரர் வேறு எந்த நீதிமன்றத்திலும் இது நாள் வரை மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரி மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. விபத்தின் தன்மை விபத்தினால் இறந்த 1-ம் மனுதாரருக்கு ஏற்பட்ட உடல்வலி, மனவேதனை, வருமான இழப்பு, போக்குவரத்து செலவுகள், இறந்த 1-ம் மனுதாரரின் வயது, குடும்ப சூழ்நிலை, பணவீக்க விகிதம் மற்றும் கால சூழ்நிலைக்கு ஏற்பவும் தொடர்ந்து உயர்ந்துக்கொண்டே வரும் வாழ்க்கை பொருட் செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இறந்த 1-ம் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் சரியானதும், நியமானதும் ஆகும்.

(vi) ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட வலி, வேதனை, மருத்துவ செலவுகள், வருங்கால மருத்துவ செலவுகள், இறந்த 1-ம் மனுதாரருக்கு வழக்கறிஞரின் உதவியாளர் பணிக்கு செல்ல முடியாமலும், விவசாய வேலைகள் செய்ய முடியாமலும் ஏற்பட்ட வருமான இழப்பு ஊட்டச்சத்து செலவு, மருத்துவமனையில் உடன் இருந்தவர்களுக்கான செலவு இவற்றிற்கு எல்லாம் மொத்தம் இழப்பீடாக ரூ.20,00,000.00 (ரூபாய் இருந்து லட்சம்) மனு தாக்கல் செய்த தேதி முதல் 12 சதவீத வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் எதிர்ம மனுதாரர்களிடம் இருந்து மனுதாரர்களுக்கு இறந்த 1-ம் கிடைக்க தக்க



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:45 +0530

உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

3. **<u>2ம் எதிர்மனுதாரரால் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>** : -

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படி செல்லாது, தள்ளுண்டு போகத்தக்கது. இந்த 2ம் எதிர்மனுதாரர், எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவராவார்.

(ii) காப்பீட்டு பாலிசியின் நிபந்தனைகளின்படி, காப்பீடு செய்யப்பட்ட நபரின் பெயரில் அனைத்து காரணங்களின் அடிப்படையிலும் வழக்கை எதிர்த்து நடத்துவதற்கான உரிமையை இவ்வெதிர்மனுதாரர் ஒதுக்கி வைத்திருப்பதாலும், மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170-ன் கீழ் இவ்வழக்கை எதிர்த்து வருகின்றார்.

(iii) 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்த TN-01-AJ-6945 என்ற பதிவு எண் கொண்ட லாரி சம்பந்தப்பட்டதாகும் என்பது உண்மை. எனினும் மனுதாரர் கூறியுள்ள விபத்து விவரங்கள் பொய்யானவை மற்றும் தவறானவை என்று இவ்வெதிர்மனுதாரர் தெரிவிக்கின்றார். மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 158-ன் படி அனுப்பப்பட வேண்டிய விபத்து தகவல் நகல்கள் மற்றும் காவல் துறை அறிக்கைகள் உள்ளிட்ட எந்த ஆவணங்களும் இவ்வெதிர்மனுதாரருக்கு வழங்கப்படவில்லை. ஆகையால், மனுதாரர் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மற்றும் காவல் துறை அறிக்கையையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகும். மேற்கண்டவற்றிற்கு பாதிப்பில்லாமல், இவ்வெதிர்மனுதாரர் கீழ்வருமாறு சமர்ப்பிக்கின்றார்.

(iv) மனுவில், 06.08.2021 அன்று மனுதாரர் தனிப்பட்ட வேலைக்காக சென்று, கோமாரம்பட்டியிலிருந்து மாம்பட்டி பேருந்து நிறுத்தம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்ததாகவும், மதியம் சுமார் 2.30 மணியளவில் மாம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் சென்றபோது எதிர்திசையிலிருந்து அதிவேகமாகவும் அலட்சியமாகவும் வந்த TN-01-AJ-6945 என்ற பதிவு எண் கொண்ட லாரி மனுதாரரை மோதி விபத்து ஏற்பட்டதாகவும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:47 +0530

கூறப்பட்டுள்ளது. அதனால் மனுதாரர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை மற்றும் தவறானவை என்று இவ்வெதிர்மனுதாரர் மறுக்கின்றார்.

(v) காவல் துறை ஆவணங்கள் மற்றும் பிற விவரங்களை சரிபார்த்த பின்னர், தேவையானால் பின்னர் கூடுதல் எதிருரை மனுவை தாக்கல் செய்யும் உரிமையை இவ்வெதிர்மனுதாரர் ஒதுக்கி வைத்திருக்கின்றார். மனுதாரர் திடீரென சாலையை கடந்ததால், இவ்விபத்து அவராலேயே ஏற்பட்டதாகும். 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு பெறும் நோக்கில் மனுதாரர் பொய்யாக இவ்விபத்தை உருவாக்கியுள்ளார். மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்கள் உண்மையற்றவை. மனுதாரருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்களுக்கு எந்த ஆதார ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுவில் குறிப்பிடப்பட்ட மாத வருமானம் ரூ.25,000/- என்பதை நிரூபிக்கும் போதுமான ஆவணங்கள் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை. சாலையில் தண்ணீர் எடுத்துச் செல்லும் போது மனுதாரர் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நிலையில், அவரது அலட்சியத்தினாலும் கவனக்குறைவினாலும் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. ஆகையால், 2 ம் எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் இழப்பீடு வழங்க பொறுப்பல்லர். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியது ஆகும்.

(vi) மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகிய விவரங்கள் அனைத்தும் தவறானவை. மனுதாரரின் அலட்சியத்தினாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. ஆகையால், 2-ஆம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் வழங்க பொறுப்பல்லர். எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 2 ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

4. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினைகள் என்ன எனில்:-</u>**

**1. விபத்து TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி ஓட்டுநரின்**



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:50 +0530

**கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதா? அல்லது இறந்த 1ம் மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதா?**

**2. 2,3 மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?**

**3. 2,3 மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதெனில் 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டின் அளவு என்ன?**

**4. 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?**

5. இம்மனுவில் 2ம் மனுதாரார் தரப்பில் மனுதாரரே ம.சா.1 ஆகவும், ஒரு காசிதீர்த்தம் என்பவர் பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சினை -1</u>**

**விபத்து TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டதா? அல்லது இறந்த 1ம் மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதா?**

7. இம்மனுவில் 2ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், மேற்படி மனுவினை தனது தந்தையான 1-ம் மனுதாரர் சாலைவிபத்தில் காயமுற்றதற்காக வேண்டி தாக்கல் செய்திருந்தார் என்றும், தனது தந்தையான இறந்த 1-ம் மனுதாரர் கடந்த 06.08.2021-ம் தேதி தங்கள் ஊரிலிருந்து கொமாரம்பட்டி என்ற ஊருக்கு தனது சொந்த வேலையாக சென்றுவிட்டு வேலையை முடித்துக்கொண்டு மீண்டும் மதியம் 12.30 மணிக்கு கொமாரம்பட்டியில் இருந்து மாம்பட்டி பஸ் ஸ்டாப்பிற்கு பஸ் ஏறுவதற்காக ரோட்டின் இடதுபுறமாக மண்ரோட்டில் நடந்து வந்துக்கொண்டிருந்தபோது காளியம்மன்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:52 +0530

கோயில் எதிரில் இறந்த 1-ம் மனுதாரருக்கு பின்னால் ஊத்தங்கரையிலிருந்து அரூர் நோக்கி வந்துக்கொண்டிருந்த TN-01-AJ-6945 என்ற லாரியை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இறந்த 1-ம் மனுதாரர் மீது மோதியதில் இறந்த 1-ம் மனுதாரருக்கு வலதுபுறம் முழங்கையில் ரத்தகாயமும், வலதுபுறம் இடுப்பில் எலும்பு முறிவும், வலதுபுறம் மற்றும் இடதுபுறம் பரியில் எலும்பு முறிவும் மற்றும் உடல் எங்கும் சிராய்ப்பு காயங்களும், ரத்தகாயங்களும் ஏற்பட்டது என்றும், அடிப்பட்ட 1-ம் மனுதாரரை அருகில் இருந்தவர்கள் 108 க்கு போன் செய்து ஆம்புலன்ஜில் ஏற்றி வந்து அரூர் GH-ல் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார்கள் என்றும், அங்கு இறந்த 1-ம் மனுதாரர் முதலுதவி செய்துக்கொண்டு பின்னர் தருமபுரி தலைமை மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்று அங்கிருந்து சேலம் நியூரோ பவுண்டேஷன் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்று இறந்த 1-ம் மனுதாரருக்கு இடுப்பில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு போல்டு பொறுத்தப்பட்டு மருத்துவமனையிலேயே 10 நாட்களுக்கு மேல் உள்நோயாளியாக இருந்து இறந்த 1-ம் மனுதாரர் சிகிச்சை பெற்று வந்தார் என்றும், மேற்படி விபத்திற்கு காரணமான TN-01-AJ-6945 என்ற லாரி ஓட்டுநரின் அதிவேகமும், அஜாகரதையும், கவனக்குறைவுமே விபத்திற்கு முழு காரணம் என்பதால் TN-01-AJ-6945 என்ற வண்டியின் ஒட்டுநர் மீது அரூர் காவல் நிலையத்தார் குற்ற எண். 522/2021 பிரிவு 279, 337 I.P.C. படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு TN 01 AJ 6945 என்ற வண்டியின் ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என்பதால் TN 01 AJ 6945 என்ற வண்டியின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரும், மேற்படி வண்டியின் பாலிசிதாரரான 2-ம் எதிர்மனுதாரரும் இறந்த 1-ம் மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்க சட்டப்படி கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும் 2 ம் மனுதாரர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். மேலும் 2 ம் மனுதாரர் தரப்பில் விபத்தை நேரில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:06:54 +0530

பார்த்த சாட்சியான ம.சா.2 காசிதீர்த்தம் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் 2ம் மனுதாரரின் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்.

8. மனுதாரர்கள் தரப்பில் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையில் TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி ஓட்டுநரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பதிவுச்சான்று ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் விபத்து ஏற்படுத்திய வாகனமானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என தெரியவருகிறது. ம.சா.ஆ.3 இன்சூரன்ஸ் பாலிசியை பரிசீலனை செய்து பார்க்கும்போது TN-01-AJ-6945 பதிவெண் கொண்ட லாரி 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. காயம்பட்ட 1ம் மனுதாரர் மதியம் 12.30 மணிக்கு போகும்போது அவராகவே மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அந்த சமயத்தில் தான் லாரி மோதிவிட்டது என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்டபோதிலும், அதை நிரூபிக்கும் வகையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தை நேரில் பார்த்த சாட்சியங்கள் யாரும் விசாரித்து நிரூபணம் செய்யப்படவில்லை. அதனால் 2ம் எதிர்மனுதாரர் கூறுவது ஏற்கத்தக்க வகையில் இல்லை என்றே இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. 2ம் மனுதாரர் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த விபத்தானது TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்று எழுவினா-1ற்கு இந்த தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

9. **தீர்வுக்குரிய பிரச்சினை 2 :-**

**2,3 மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் இழப்பீடு யாரால் கொடுக்கப்பட வேண்டும்?**

10. 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.06.02 17:06:58 +0530

ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டிருப்பது பிரச்சினை-1ன் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் விபத்தால் காயமடைந்து சிகிச்சையும் பெற்றுள்ளார் என்பது அவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. ம.சா.ஆ.3 இன்சூரன்ஸ் பாலிசியை பரிசீலனை செய்து பார்க்கும்போது விபத்து சமயத்தில் TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரிக்கு காப்பீடு உள்ளது என்பது தெரியவருகிறது. அது 14.07.2021 முதல் 13.07.2022 வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து தேதியான 06.08.2021ம் தேதியில் காப்பீடு உள்ளது. மேலும் விபத்து சமயத்தில் TN-01-AJ-6945 என்ற பதிவெண் கொண்ட லாரி ஓட்டுனருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பது என்பது ம.சா.ஆ.4 ல் இருந்து தெரியவருகிறது. இழப்பீட்டு மனு நிலுவையில் இருக்கும்போது விபத்தில் காயமடைந்த 1ம் மனுதாரர் வாசு என்பவர் இறந்துவிட்டார். அதனால் 1ம் மனுதாரருக்கு உண்டான மருத்துவ செலவுகள் மட்டும் 2,3 மனுதாரர்கள் பெற தகுதியுடையவர்கள் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

11. **<u>தீர்வுக்குரிய பிரச்சினை 3 : -</u>**

**2,3 மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதெனில் 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டின் அளவு என்ன?**

12. இழப்பீட்டு மனு நிலுவையில் இருக்கும்போது விபத்தில் காயமடைந்த 1ம் மனுதாரர் வாசு என்பவர் இறந்துவிட்டார். ஆள் வழக்கு ஆளுடன் முடியும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விபத்தில் காயமடைந்த 1ம் மனுதாரர் மனு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார். ஆதலால் 2,3 மனுதாரர்களுக்கு 1ம் மனுதாரர் சிகிச்சையில் இருக்கும்போது செய்த செலவுத்தொகையான மருத்துவ செலவுகள் மட்டும் இழப்பீடாக பெற தகுதியுடைவர்கள். வேறு எந்த தலைப்பின் கீழும் இழப்பீடு பெற தகுதியற்றவர்கள் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. அந்த வகையில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.11 தாக்கல்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:01 +0530

செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.11 ன்படி மருத்துவ பில்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் உட்பட ரூ.2,78,179/- 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. 2,3 மனுதாரர்கள் வேறு தலைப்பின் கீழ் கோரியுள்ள எந்த இழப்பீடும் 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

13. மனுதாரர்கள் சாட்சியம் மற்றும் மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில், கீழ்க்கண்ட தலைப்புகளில் 2,3 மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

| **வ.எண்.** | **இழைப்பீட்டிற்கான தலைப்புகள்** | **தொகை (ரூ.யில்)** |
|---|---|---|
| 1. | மருத்துவ செலவு | 2,78,179/- |
| | **மொத்தம்** | **2,78,179 /-** |

14. எனவே, 2,3 மனுதாரர்கள் **ரூ.2,78,179/-** (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நூற்று எழுபத்து ஒன்பது மட்டும்) 7.5% வட்டியுடன் இழப்பீடாக பெறத்தக்கவர்கள். 2,3 மனுதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெறத்தக்கவர்கள் அல்ல என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

15. **தீர்வுக்குரிய பிரச்சினை-4**

**2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?**

2,3 மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை இத்தீர்ப்பாயத்தில் வைப்பீடு செய்யப்படும் வரை ஆண்டிற்கு 7.5% வட்டி கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், மனுவிற்கான செலவுத்தொகையும் 2,3 மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

16. **இறுதியாக,** இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2,3 மனுதாரர்களுக்கு மொத்த



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:03 +0530

இழப்பீடாக **ரூ.2,78,179/-** (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நூற்று எழுபத்து ஒன்பது மட்டும்) கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி தொகையை 2,3 மனுதாரர்கள் இறந்துபோன 1ம் மனுதாரரின் வாரிசுகள் என்பதால் இருவருக்கும் தலா 50% கிடைக்கத்தக்கது என்றும், மேற்படி தொகையை 2ம் எதிர்மனுதாரர் 2,3 மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையினை மனு தேதியில் இருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் (தவறுகைக்காக மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்திற்குரிய வட்டி நீங்கலாக) மற்றும் செலவுத் தொகையும் சேர்த்து, 2ம் எதிர்மனுதாரர் 2,3 மனுதாரர்களுக்கு உண்டான இழப்பீட்டு தொகையை இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில், அதாவது State Bank of India அரூர் கிளையில் "The Subordinate Judge (MACT). Harur பெயரில் உள்ள நடப்பு கணக்கு எண்.42863408801-ல் (IFSC Code No.**SBIN0000997**) நேரடியாக NEFT or RTGS (By direct transfer through NEFT or RTGS) மூலம் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது. 2,3 மனுதாரர்களுக்காக வைப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய வட்டி தொகை 2,3 மனுதாரர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக NEFT or RTGS (By direct transfer through NEFT or RTGS) மூலம் 2,3 மனுதாரர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

17. வழக்கறிஞர் கட்டணம் **ரூ.8,564/-** (ரூபாய் எட்டாயிரத்து ஐநூற்று அறுபத்து நான்கு மட்டும்) என நிர்ணயம் செய்யப்படுகிறது.

18. எஞ்சிய **ரூ.1,782/-** நீதிமன்ற கட்டணத்தை 2,3 மனுதாரர்கள் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. இழப்பீட்டு தொகைக்கான மீதி நீதிமன்ற கட்டணத்தை 2,3 மனுதாரர்கள் செலுத்தும் வரை இழப்பீடு தொகையை 2,3 மனுதாரர்கள் பெற உரிமையற்றவர் ஆவார் என்று உத்தரவிடப்படுகிறது.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:05 +0530

19. **2020(4) CTC 272, M/S. Cholamandalam Ms Genl Ins Co Ltd vs Mr. Ayyannar S** என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இவ்வழக்கில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

**மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல்**

| | | |
|---|---|---|
| பிராஸ் கட்டணம் | ரூ. | 372.50 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | ரூ. | 10.00 |
| புரோசஸ் கட்டணம் | ரூ. | 10.00 |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | ரூ. | 60.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. | 8,564.00 |
| கூடுதல் நீதிமன்ற கட்டணம் | ரூ. | 1,782.00 |
| தட்டச்சு கட்டணம் | ரூ. | 100.00 |
| **மொத்தம்** | ரூ. | **10,898.50** |

20. 2 எதிர்மனுதாரர் 2,3 மனுதாரர்களுக்கு **ரூ.10,898.50**/- செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இந்ததொகை 2,3 மனுதாரர்கள் தலா 50% பெறத்தக்கவர்கள்.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 02ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:08 +0530

சார்பு நீதிபதி, அரூர்.

மோட்டார் வாகன விபத்து கோரிருமை தீர்ப்பாயம்.

**மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்** :-

| | |
|---|---|
| ம.சா.1 | நெல்சன்மண்டேலா (2ம் மனுதாரர்) |
| ம.சா.2 | காசிதீர்த்தம் |



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:13 +0530

**<u>மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள்: -</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.08.2021 | முதல் தகவல் அறிக்கை - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.2 | --- | விபத்து ஏற்படுத்திய TN-01-AJ-6945 வாகனத்தின் R.C - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.3 | --- | விபத்து ஏற்படுத்திய TN-01-AJ-6945 வாகனத்தின் பாலிசி நகல் - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.4 | --- | விபத்து ஏற்படுத்திய TN-01-AJ-6945 வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | விபத்து ஏற்படுத்திய TN-01-AJ-6945 வாகனத்தின் Permit - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.6 | 09.08.2021 | விபத்து ஏற்படுத்திய TN-01-AJ-6945 வாகனத்தின் MVI Report - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.7 | 06.08.2021 | இறந்த 1ம் மனுதாரரின் Accident Register - ஒளிப்படநகல் |
| ம.சா.ஆ.8 | --- | இறந்த 1ம் மனுதாரரின் Discharge Summary - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.9 | --- | இறந்த 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை - ஒளிப்பட நகல் |
| ம.சா.ஆ.10 | --- | இறந்த 1ம் மனுதாரரின் Wound Certificate - அசல் |
| ம.சா.ஆ.11 | --- | இறந்த 1ம் மனுதாரரின் மருத்துவ பில்கள் - அசல்கள் |
| ம.சா.ஆ.12 | --- | 1ம் மனுதாரரின் இறப்பு சான்று - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |
| ம.சா.ஆ.13 | --- | 1ம் மனுதாரரின் வாரிசு சான்று - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |
| ம.சா.ஆ.14 | --- | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |
| ம.சா.ஆ.15 | --- | 2ம் மனுதாரரின் வங்கி பாஸ் புத்தகம் - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |
| ம.சா.ஆ.16 | --- | 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |
| ம.சா.ஆ.17 | --- | 3ம் மனுதாரரின் வங்கி பாஸ் புத்தகம் - ஒளிப்பட நகல் (அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது) |



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 17:07:16 +0530

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**: -

---இல்லை---

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.06.02 17:07:20 +0530

**சார்பு நீதிபதி, அரூர்.**

**மோட்டார் வாகன விபத்து கோரிருமை தீர்ப்பாயம்.**